www.Padasalai.Net www.Trb Tnpsc.com

# சிறப்புத் தேர்வு - 2024

**S** பத்தாம் வகுப்பு Reg.No. :

## தமிழ்

நேரம்: 3.00 மணி பகுதி - I மதிப்பெண்கள்: 100

உரியவிடையைத் தேர்ந்தெடுத்துக்குறியீட்டுடன் எழுதுக. 15 x 1 = 15

1. வேர்க்கடலை. மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை
அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

2. சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி - என்னும் அடியில் பாக்கம் என்பது
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

3. குலசேகர ஆழ்வார் வித்துவக்கோட்டம்மா என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம் பெற்றுள்ள வழுவமைதி முறையே
அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி
இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி

4. இங்கு நகரப் பேருந்து நிற்குமா? என்று வழிப்போக்கர் கேட்பது ________ வினா. அதோ அங்கே நிற்கும் என்று மற்றொருவர் கூறியது ________ விடை.
அ) ஐயவினா, வினாஎதிர் வினாதல் ஆ) அறிவினா, மறை விடை
இ) அறியாவினா, சுட்டு விடை ஈ) கொளல்வினா, இனமொழி விடை

5. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?
அ) கரகாட்டம் என்றால் என்ன? ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
இ) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை?
ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

6. தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன் என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்
அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

7. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் ________.
அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

8. கருணையன் என்பவர் ________.
அ) வீரமாமுனிவர் ஆ) யோசேப்பு இ) அருளப்பன் ஈ) சாந்தாசாகிப்

9. "நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா" என்றழைக்கப்படுபவர்
அ) பாவாணர் ஆ) தமிழழகனார் இ) பாரதியார் ஈ) மறைமலையடிகள்

10. சதாவதானி என்று பாராட்டுப் பெற்றவர்
அ) பாரதியார் ஆ) செய்குதம்பிப்பாவலர் இ) வீரமாமுனிவர் ஈ) குமரகுருபரர்

11. "மார்கழித்திங்கள்", "விரிகடல்" - என்பவற்றின் இலக்கணக்குறிப்பு முறையே
அ) இருபெயரொட்டுப்பண்புத்தொகை, வினைத்தொகை
ஆ) உருபும் பயனும் உடன்தொக்கதொகை, வினைத்தொகை
இ) பண்புத்தொகை, உவமைத்தொகை ஈ) உவமைத்தொகை, பண்புத்தொகை

*பாடலைப்படித்து வினாக்களுக்கு விடையளி*

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட்டம்மா நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே!

For Answer search this - @vskteaches - in YouTube
www.vskteaches.xyz
kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

12. இப்பாடல் இடம்பெற்ற நூல்
அ) நீதிவெண்பா ஆ) பெருமாள் திருமொழி இ) இரட்டுறமொழிதல் ஈ) தேம்பாவணி
13. இப்பாடலின் ஆசிரியர் பெயர்
அ) தமிழழகனார் ஆ) செய்குதம்பிப்பாவலர் இ) குலசேகராழ்வார் ஈ) வீரமாமுனிவர்
14. இப்பாடலில் வரும் அடிஎதுகைகள்
அ) மாளாத, மாயத்தால் ஆ) வாளால், மாளாத
இ) மாளாத், நோயாளன் ஈ) ஆளா, அடியேனே
15. இப்பாடல் இயற்றிய ஆசிரியரின் காலம்
அ) ஏழாம் நூற்றாண்டு ஆ) ஒன்பதாம் நூற்றாண்டு
இ) ஐந்தாம் நூற்றாண்டு ஈ) எட்டாம் நூற்றாண்டு

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 4 x 2 = 8
வினா எண் 21-க்கு கட்டாயம் விடையளிக்கவும்

16. "நச்சப் படாதவன்" செல்வம் - இத்தொடரில் வண்ணமிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.
17. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
18. சதாவதானம் - விளக்குக
19. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
20. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக?
21. ஒருவருக்கு வறுமையைப் போன்று துன்பம் தருவது வறுமையே என்று பொருள் தரும் குறளை அடிபிறழாமல் எழுதுக

### பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5 x 2 = 10

22. இந்த அறை இருட்டாகஇருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? இதோ.... இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே? மின்சாரம் இருக்கிறதா. இல்லையா?
*மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.*
23. அன்பின் ஐந்திணைகள் யாவை?
24. *கலைச்சொல் அறிக :* அ) Nanotechnology ஆ) Cabinet
25. *வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.*
அ) பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.
ஆ) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
26. *இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.*
அ) வளி - வாளி ஆ) மடு - மாடு
27. *தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி. தமிழ் எண்ணுரு தருக*
அ) நானிலம் ஆ) முச்சங்கம்
28. *சொற்களைப் பிரித்துப் பொருள் தருக :* அ) வருந்தாமரை ஆ) கானடை

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2 x 3 = 6

29. இன்றைய கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்து சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.
30. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
31. *உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக*
தற்போது வருகின்ற திரைப்படங்கள் குடும்பத்துடன் பார்க்கக்கூடிய திரைப்படங்களாக இல்லை. குடும்ப உறவுகள். அன்பின் பிணைப்பு. மனிதநேயம் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதாக இல்லை. பழைய திரைப்படங்கள் மனித நேயத்திற்கும்

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
For Answer search this - @vskteaches in YouTube
www.vskteaches.xyz

அரவணைப்பிற்கும் முக்கியத்துவம் கொடுத்தன. சமூக சிக்கல்களைத் தீர்க்கும் படங்கள். சமுதாய சிந்தனைமிக்க படங்கள் வெளிவரவேண்டும். அப்படிப்பட்ட படங்கள் வந்தால்தான் இன்றைய இளைஞர்கள் சமூக ஆர்வலர்களாக மாறுவதற்கான வாய்ப்புகள் உண்டு. திரைப்படங்கள் கதைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமேயொழிய வன்முறைக்கு இடமிருக்கக்கூடாது. வன்முறையற்ற படங்கள் தான் சமுதாயத்தை செம்மைப்படுத்தும்.

அ) எவ்வகைப்படங்கள் சமுதாயத்தை செம்மைப்படுத்தும்?

ஆ) இளைஞர்கள் சமூக ஆர்வலர்களாக மாறுவதற்கு எப்படிப்பட்ட படங்கள் வரவேண்டும்?

இ) பழைய திரைப்படங்கள் எதற்கு முக்கியத்துவம் கொடுத்தன?

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **2 x 3 = 6**

வினா எண் 34 கட்டாய வினா.

32. மன்னன் இடைக்காடனார் என்ற புலவருக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

33. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

34. "விருந்தினனாக" எனத்தொடங்கும் பாடல்

*(அல்லது)*

"தூசும் துகிரும்" எனத்தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக

பிரிவு - 3

இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. **2 x 3 = 6**

35. முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.
*- இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக*

36. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான் *- இப்பாடலில் பயின்று வரும் அணியை விளக்குக*

37. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும் *- அலகிடுக*

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. **5 x 5 = 25**

38. அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக

*(அல்லது)*

ஆ) கருணையனின் தாய் மறைவிற்கு வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39. அ) "மிக்ஜாம்" புயலில் உங்கள் தெரு சாலை பழுதடைந்து விட்டது. சாலையைச் செப்பனிட பொதுப்பணித்துறை செயற்பொறியாளருக்கு ஒரு விண்ணப்பம் வரைக.

*(அல்லது)*

ஆ) தரமற்ற உணவு வழங்கிய உணவகத்தின் மீது நடவடிக்கை கோரி உணவுத்தரக்கட்டுப்பட்டு ஆணையருக்கு ஒரு புகார்க்கடிதம் வரைக.

40. *காட்சியைக் கண்டு கவினுற எழுதுக*



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

For Answer search this - @vskteaches - in YouTube
www.vskteaches.xyz
www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

41. மதுரை அண்ணாநகரில் வசிக்கும் ஆதிகேசவன் மகள் மாலா என்பவர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பத்தாம்வகுப்பில் தமிழ் 86. ஆங்கிலம் 68, கணிதம் 80, அறிவியல் 86, சமூக அறிவியல் 79 பெற்றுள்ளார். அவர் அதே பள்ளியில் பதினொன்றாம் வகுப்பில் அறிவியல் பிரிவில் ஆங்கில வழியில் சேர்வதற்கு விரும்புகிறார். தேர்வர் தன்னை மாலாவாக பாவித்து படிவத்தைப் பூர்த்தி செய்க

42. அ) *மொழி பெயர்க்க*

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

*(அல்லது)*

ஆ) ஒவ்வொரு சூழலிலும் ஒருவருக்கொருவர் உதவி செய்தபடி இருக்கிறார்கள். உதவி பெற்றபடியும் இருக்கிறார்கள். சில உதவிகள் அவர்கள் மீதுள்ள அன்பினால் செய்கிறோம். சில உதவிகள் இரக்கத்தால் செய்கிறோம். தொடர்வண்டியில் பாட்டுப் பாடிவரும் ஒருவருக்கு நம்மையறியாமல் பிச்சை போடுகிறோம். தொல்லை வேண்டாம் என்று கருதி வேண்டாவென்ற வெறுப்போடு சில இடங்களில் உதவி செய்கிறோம்.

*நீங்கள் செய்த. பார்த்த உதவிகளால் எய்திய மனநிலையைப் பட்டியலிடுக.*

## பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 3 x 8 = 24

43. அ) உங்கள் இல்லத்திற்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக

*(அல்லது)*

ஆ) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

44. அ) "அன்னமய்யா" பெயர்ப்பொருத்தம் கதை எழுதுக.

*(அல்லது)*

ஆ) "ஒருவன் இருக்கிறான்" அழகிரிசாமியின் கதையைக் கரு மாறாமல் எழுதுக.

45. அ) விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

*(அல்லது)*

ஆ) நாடுபோற்றும் தவப்புதல்வர் - பிறப்பு - நாட்டுப்பற்று - விடுதலைப்போரில் பங்கு - பங்குபெற்ற போராட்டங்கள் - என்ற குறிப்புகளைப்பயன்படுத்தி உனக்குப்பிடித்த தலைவர்களில் ஒருவரைப்பற்றிக் கட்டுரை வரைக.

******

For Answer search this - @vskteaches - in YouTube
www.vskteaches.xyz
www.Padasalai.Net
kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com